CASE NO : ID 69/2025

NAME : WW1 – C. ராஜா

DATE : 04.05.2026

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்துவைக்கப்பட்ட பின்பு குறுக்கு விசாரணை

நான் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் ஓட்டுநராக ஒண்டிபுதூர் கிளையில் 01.04.2016 முதல் பணியாற்றி வருகிறேன். எனக்கு 12(3) ஒப்பந்ததை பற்றி தெரியுமா என்றால் தெரியும். அதில் review benefits பெறுவதற்கு performance of the nature of the work, வழக்கு நிலுவையில் இருக்க கூடாது, LLP இருக்கக் கூடாது என்பதை பொறுத்து தான் review benefits வழங்கப்படும் என்றால் சரிதான். இதை பொறுத்தே 01.09.2016 வது ஊதிய ஒப்பந்தம் மற்றும் 04.01.2018 ஊதிய ஒப்பந்தங்களின் படி எனக்கு LLP -11 நாட்கள் இருந்ததால் தான் review benefits தள்ளி வைக்கப்பட்டது என்றால் சரியல்ல. 6 வருடங்கள் கழித்து 01.04.2022 ல் முதல் review benefits வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் 11 நாட்கள் LLP இருந்த காரணத்தினால் 15.04.2022 ல் நிர்ணயம் செய்யப்பட்டது. கடந்த 01.11.2022 ல் முதல் கட்ட ஆய்வு பலன்

வழங்கப்பட்டுவிட்டது. வேண்டுமென்றே முதலாம் ஆய்வு பலன்களை பெற்று கொண்டு இம்மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் நேதாஜி போக்குவரத்து ஊழியர் சங்கத்தின் உறுப்பினர் என்பதை காட்டுவதற்கு அதன் சந்தா ரசீது ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிர்மனுதாரர் நிறுவனத்திடலல முதலாம் ஆய்வு பலன் 11 மாதங்கள் தாமதமாக வழங்கியதற்கு எழுத்து மூலமாக கடிதம் எதுவும் வழங்கியுள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு representation letter எதுவும் தாக்கல் செய்தீர்களா என்றால் இல்லை. எனவே சங்கத்தின் பெயரை பயன்படுத்தி வேண்டுமென்றே காழ்ப்புணர்சியின் பெயரில் எதிர்மனுதாரர் நிறுவனத்திற்கு எதிராக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு LLP இருந்ததால் தான் முதலாம் ஆய்வு பலன் காலம் தாழ்த்தி வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனவே இவ்வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. இம்மாதிரியான மனுக்களை ஏற்றுக்கொண்டால் இந்த வழக்கு மற்றவர்களுக்கும் முன்மாதிரியாக இருக்கக்கூடும் என்றும், சம்பள பட்டியலில் சங்க உறுப்பினர்களுக்கு LLP யை

பற்றி தகவல் கொடுக்கப்பட்டிருந்தும் உடனே நடவடிக்கை எடுக்கவில்லை என்பதும் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்பது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/-xxx

தலைமை தாங்கும் அதிகாரி,

முதன்மை தொழிலாளர் நீதிமன்றம்,

கோயமுத்தூர்.